29th January 1966]

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அந்த அதிகாரி தன்னுடைய கடமையை ஒழுங்காகச் செய்து பணியாற்றியிருக்கிறார் என்பதாக கலெக்டர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்று முன்பே பதில் சொன்னேன்.

Overbridge in Tiruvottiyur High Road

*15 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there has been any delay in the execution of the construction work of overbridge at level crossing in Tiruvottiyur High Road in Madras City ; and

(b) if so, the reasons thereof and when it is likely to be completed ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) மேம்பாலம் கட்டும் வேலையில் தாமதம் ஏற்பட்டதற்குக் காரணங்கள் வருமாறு:—

(i) இந்த நிலங்களிலுள்ள கட்டடங்களின் மதிப்பை முன்னிட்டு நிலச் சொந்தக்காரர்கள் கூடுதல் இழப்பீடு (additional compensation) வேண்டி நீதி மன்றத்தில் தொடர்ந்து சில வழக்குகள் முடிவுறாமை;

(ii) எஃகுக் கம்பிகள் கிடைப்பதில் உள்ள இடர்பாடுகள்.

ஆயினும், மேம்பாலம் கட்டும் வேலையை 1966 மார்ச் மாதத்திற்குள் முடித்துவிட கூடுமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. ஏ. மதியழகன்: சில வீட்டுக்காரர்களால் தொடரப்பட்ட வழக்குகள் முடிந்துவிட்டனவா? அவை நமக்கு அனுகூலமாக முடிந்தனவா? இப்பொழுது அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற காலவரையறைக்குள் இந்த மேம்பாலம் கட்டி முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: துரிதமாக நடக்கவேண்டிய வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. மாநகர ஆட்சி மன்றமும் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. கமிஷனர் ஒவ்வொரு மாதமும் ஸ்பாட்டுக்குச் சென்று, ப்ராகிரஸ் ரிபோர்ட்டு கேட்டு, துரிதமாக வேலை நடந்துகொண்டிருக்கிறது. நில ஆர்ஜித கேஸ்கள் சம்பந்தப்பட்டவரையில், 5 கேஸ்கள் ஏற்கனவே முடிந்துவிட்டன. மீதி 8 கேஸ்கள் சம்பந்தப்பட்டவரை கவுன்சில் தீர்மானத்தை வைத்துக்கொண்டு, சீக்கிரம் நடவடிக்கை எடுத்து பின்பு காம்பென்ஸேஷன் கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த மேம்பாலம் வடசென்னை தொழில் பகுதியை இணைக்கின்ற முக்கியமான காரணத்தினால், எந்தவிதமான தடங்கலும் ஏற்படாத நிலைமையில், மாநகர ஆட்சி

[29th January 1966

மன்றத்தையும், சம்பந்தப்பட்ட என்ஜினியர்களையும் துரிதப் படுத்தி, விரைவாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வரக்கூடிய மார்ச்சு மாதம் 31-ம் தேதிக்குள் இந்த வேலை முடிவுற்று, இந்தப் பாலம் திறக்கப் படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—ADJOURNMENT MOTION.

FAILURE TO MAINTAIN SANITARY CONDITIONS AROUND GOVERNMENT ESTATE, MADRAS.

MR. SPEAKER : The hon. Member, Sri M. Kalyanasundaram, has given notice of an adjournment motion for discussing a matter of urgent public importance—it is a very strange notice—namely, ' the failure of the Government to ensure suitable sanitary atmosphere around Government Estate, Mount Road, Madras, where unbearable stinking smell is spreading and interfering with the work of the Members of the Legislature '.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, இம்மாதிரி ஒரு தீர்மானம் கொண்டுவர நேர்ந்ததுபற்றி நான் வருந்துகிறேன். இந்தச் சபையின் நடவடிக்கையில் இதுபற்றி குறிப்பிட நேர்ந்ததுபற்றி மன்னிக்க வேண்டுகிறேன். துர்நாற்றம் சகிக்க முடியவில்லை. நான் என் அனுபவத்தில் சொல்லுகிறேன். எனக்கு உடல் நலமும் சரியாக இல்லை, இரவில் வேலை செய்ய முடியவில்லை. காலையிலும் வேலை செய்ய முடியவில்லை, அவ்வளவு மோசமாக இருக்கிறது துர்நாற்றம். இந்த வருஷம் மட்டும் ஏன் இப்படி இருக்கிறது என்பது பற்றி ஆராயவேண்டும். ஹாஸ்டலில் தங்குகிற பல அங்கத்தினர்கள் இதை ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் உள்ளத்தில் இருக்கிறது, ஆனால் அதை எடுத்துச்சொல்லவில்லை. ஆகவே, இது பற்றி தக்க நடவடிக்கை எடுத்து, சுகாதார அதிகாரிகளையும், கார்ப்பரேஷன் அதிகாரிகளை யும் கொண்டு இதற்கு என்ன காரணம் என்பதை பரிசிலனை செய்து, அதற்குப் பரிகாரம் தேடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கனம் அமைச்சர் திரு. மன்றாடியார் அவர்கள் கூட நான் சொல்லுவதை ஆதரிப்பார்கள், வெளிப் படையாக எடுத்துச் சொல்லாவிட்டாலும், என்று நான் நினைக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயம் பற்றிக் கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த மன்றத் திலே கொண்டு வந்ததைப் பற்றி நான் நன்றி தெரிவிக்கிறேன், அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இப்படி ஹாஸ்டலிலே அங்கத்தினர்கள் சகிக்கிக்கமுடியாத துர்நாற்றம் அடிக்கும் நிலைமை இருப்பதை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதும் முறைதான். என்னைப்பொருத்த வரையில், நான் கார்ப்ப ரேஷன் அதிகாரிகளையோ அல்லது சம்பந்தப்பட்ட சர்க்கார்